உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும்
சிதம்பரம் இராமலிங்கப்பிள்ளை அவர்கள்
திருவாய்மலர்ந்தருளிய

# நடராஜபதி சற்குருமணிமாலை.

## சிவகாமியம்மன்பேரில் அருட்பத்து

இஃது.

சிதம்பரம்
பு. வே. சுந்தரம்பிள்ளை கேட்டுக்கொண்டபடி
இவை
சரவணபுரம்
சண்முகமுதலியாரவர்களால்
பார்வையிடப்பட்டு.

புரசபாக்கம்.
ஏழுமலைப் பிள்ளையவர்களது
விவேகவிளக்கஅச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

விக்ருதி௵

ஆரும் புத்தகம்.

அருட்பெருஞ்சோதி

திருவருட்பிரகாசவள்ளலார்

திருவாய்மலர்ந்தருளிய

# நடராஜர் பேரில்

## சற்குருமணிமாலை.

வெண்பா.

என்னறிவா மென்னறிவி னின்பமா மென்னறிவின்
றன்னறிவா முண்மைத் தனிநிலையாம் மன்னுகொடிச்
சோலையிட்டான் வாழச்சிவகாமசுந்தரியை
மாலையிட்டான்பாதமலர்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

மாற்றறியாதசெழும்பசும்பொன்னே மாணிக்கமேமக
டர்வண்ணைக்கொழுந்தே, கூற்றறியாதபெருந்தவருள
க்கோயிலிருந்த குணப்பெருங்குன்றே வேற்றறியாதசி
ற்றம்பலக்கனியே விச்சையில்வல்லவர்மெச்சுவிருந்தே,
சாற்றறியாதவன்சாற்றுங்கனித்தான்தனிநடராஜவென
சற்குருமணியே. (க)

கற்கரையும்படி கரைவிக்குங்கருத்தே கண்மணியே
மணிகலந்தகண்ணொளியே, சொற்கரையின்றியவொளி
யினுள்ளொளியே துரியமுங்கடந்திட்டபெரிய செம்
பொருளே, சிற்கரைதிரையறுதிருவருட்கடலேதெள்ள
முதேகனியசெழும்பாகே, சர்க்கரையேயதுசார்ந்தசெந்
தேனே தனிநடராஜவென்சற்குருமணியே. (உ)

என்னுயிரோவெனதினுயிர்க்குயிரோவென்னறிவேயெனதறிவினுக்கறிவே, அன்னையினினியவென்னம்பலத்தமுதேவற்புதமேபதமேயெனதன்பே, பொன்னினையடிமலர்முடிமிசைப் பொருந்தப்பொருந்திய தாவுடைப்புண்ணியப்பொருளே, தன்னியலறிவருஞ்சத்தியநிலையேதனிநடராஜவென்சற்குருமணியே. (௩)

காய்மனக்கடையனைக்காத்த மெய்ப்பொருளே கலைகளும்கருதறுமொருபெரும்பதியே, தேய்மதிச்சமையருக்கரியவொண்சுடரே சித்தெலாம்வல்லதோர்சத்திய முதலே, ஆய்மதிப்பெரியருள்ளமர்ந்த சிற்பரயேயம்பலத்தாடல்செய்செம்பதத்தரசே, தாய்மதிப்பரியதோர் தயவுடைச்சிவமேதனிநடராஜவெண்சற்குருமணியே. (௪)

உருவமுமருவமுமுபயமுமுளதாய் உளதிலதாயொளிரொருதனிமுதலே, கருவினிலெனக்கருள்களித்தளித்தவனேகண்ணுடையாய்ப்பெருங்கடவுள்பதியே, திருநிலைபெறவெனைவளர்க்கின்றபரமசிவகுருதுரியத்திற்றெளியனுபவமே, தருவளர்பொழில்வடற்சபைநிறையொளியேதனிநடராஜவெண்சற்குருமணியே (௫)

ஆறந்தநிலைகளினனுபவநிறைவேயதுவதுவாயொளிர்பொதுவுறுநிதியே, கூறெந்தநிலைகளுமொருநிலை யெனவே கூறியென்னுள்ளத்திற் குலவியகளிப்பே, பேறிந்தநெறியெனக்காட்டியென்றனையே பெறுநெறிக்கேற்றியவொருபெரும்பொருளே, சாறெந்நாள்களும் விளங்குமோர்வடல்வாய்த் தனிநடராஜவென் சற்குருமணி

சாகாததலையிதுவேகாதகாலாந்தர மிதுகாணெனத்த
யவுசெய்துரைத்தே, போகாதபுனலையுந் தெரிவித்தென்
னுள்ளத்தேபொற்புதவமர்ந்ததோரற்புதச்சுடரோ, ஆகா
தபேர்களுக்காகாதநினைவேயாகியவெனக்கென்றுமாகிய
சுகமே, தாகாதலெனத்தருந் தருமசத்திரமே தனிநடரா
ஜவென்சற்குருமணியே. (௭)

தத்துவமசிநிலையிதுவிதுதானேசத்தியங்காணெனத்
தனித்துரைத்தெனக்கே, எத்துவந்தனைகளுநீக்கிமெய்ந்நா
நிலைக்கேயேற்றிநானிறவாதவியலளித்தருளார், சித்து
வந்துலங்களெவற்றினுமாடச்செய்விக்கும்பேருட்சிவப
ரஞ்சுடரோ, சத்துவநெறிதருவடலருட்கடலேதனிநடரா
சவென் சற்குருமணியே (௮)

இதுபதியிதுபொருளிதுசுகமடைவாயிதுவழியென
வெனக்கியல்புறவுரைத்தே, விதுவமுதொடுசிவ வமுத
முமளித்தே மேனிலைக்கேற்றியபெருநிலைச்சுடரோ போ
துநடமிடுகின்றபுண்ணியப்பொருளேபுரையுறுமுளத்தி
டைப்பொருந்தியமருந்தே, சதுமறைமுடிகளின்முடியு
றுசிவமே தனிநடராஜவென்சற்குருமணியே (௯)

என்னிலையிது வுறுநின்னிலையிதுவா மிருநிலைகளு
மொருநிலையெனவறிவாய்முன்னிலைசிறவிதுமயலுறலா
ம்முன்னிலைபின்னிலைமுழு நிலையுளவாம், இன்னிலையறி
ந்தவ ணெழுநிலைகடந்தே யியநிலையடைகவென்றியம்
பியபரமே, தன்னிலையாகிய நன்னிலையரசேதனிநடராஜ
வென்சற்குருமணியே. (௰)

திருச்சிற்றம்பலம்.

# திருச்சிற்றம்பலம்

# சிவகாமியம்மன்பேரில்

## அருட்பத்து

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

ஜோதிக்கொடியேயானந்தச்சொரூபக்கொடியே ஜோ
தியுருப்பாதிக்கொடியே ஜோதியிடப்பாகக்கொடியேஎ
னையீன்ற, ஆதிக்கொடியேயுலகுகட்டியாளுங்கொடியச
ன்மார்க்கநீதிக்கொடியே சிவகாமநிமலக்கொடியே யரு
ளுகவே (௧)

பொருணற்கொடியே மாற்றுயர்ந்தபொன்னங்கொடி
யேபோதாந்த, வருணக்கொடியேயெல்லாஞ்செய்வல்லா
ரிடஞ்சேர்மணிக்கொடியே, தருணக்கொடியேயென்ற
னைத் தாங்கியோங்குந்தனிக்கொடியே, கருணைக்கொடி
யேஞானசிவ காமக்கொடியேயருளுகவே (௨)

நீட்டுக்கொடியேசன்மார்க்கநீதிக்கொடியே சிவகீதம்
பாட்டுக்கொடியே யிறைவரிடப்பாகக்கொடியேபாநாத
நாட்டுக்கொடியேயெனையீன்ற ஞானக்கொடியே யென்
னுறவாங், கூட்டுக்கொடியேசிவகாமக்கொடியேயடியே
ற்கருளுகவே. (௩)

மாலக்கொடியேன் குற்றமெல்லா மன்னித்தருளிமா ணமெனுஞ், சாலக்கொடியையொடித்தெனக்குட்சார்ந் து விளங்குந்தவக்கொடியே, காலக்கருவைக் கடந்தொ ளிர்வான் கருவுங்கடந்து வயங்குகின்ற, கோலக்கொடி யேசிவஞானக்கொடியேயடியேற்கருளுகவே. (ச)

நாடாக்கொடியமனமடக்கி நல்லமனத்தைக் கனிவித் துப, பாடாப்பிழையைப்பொறுத்தெனக்குப் பதமீந்தா ண்ட பதிக்கொடியே, தேடாக்கருமச்சித்தியெலாந் தி கழத்தயவாற்றெரிவித்த, கோடாக்கொடியேசிவதருமக் கொடியேயடியேற்கருளுகவே. (ரு)

மணங்கொள்கொடிப் பூமுதனான்குவகைப்பூவ டிவுள்வயங்குகின்ற, வணங்கொள்கொடியேயைம்பூவும் மலியமலர்ந்தவான்கொடியே, கணங்கள்யோக சித்திெய லாங்காட்டுங்கொடியே கலங்காத, குணங்கொள்கொடி யே சிவபோகக்கொடியேயடியேற்கருளுகவே. (சா

புலங்கொள்கொடிய மனம்போனப்போக்கிற்போகா தெனைமீட்டு, நலங்கொள்கருணைச்சன்மார்க்கநாட்டில்வி டுத்தநற்கொடியே, வலங்கொள்ஞான சித்தியெலாம்வய ங்கவிளங்கு மணிமன்றிற், குலங்கொள்கொடியே மெய் ஞ்ஞானக்கொடியேயடியேற்கருளுகவே. (எ)

வெறிக்குஞ்சமயக்குழியில்விழவிரைந்தேன் றன்னை விழாதவகை, மறிக்குமொருபேரறிவளித்தவள்ளற்கொடியேமனைக்கொடியைச், செறிக்கும் பெரியருளத்தோங்குந்தெய்வக்கொடியேசிவஞானங், குறிக்குங்கொடியேயானந்தக்கொடியேயடியேற்கருளுகவே. (௮)

கடுத்தவிடர் வன்பயங்கவலை யெல்லாந்தவிர்த்துக்கருத்துள்ளே, அடுத்தகொடியயயருளமுத மளித்தென்றன்னையருட்காரத்தால், எடுத்தகொடியேசித்தியெலா மீந்தாமகனே யென்றெனக்கே, கொடுத்தகொடியேயானந்தக்கொடியேயடியேற்கருளுகவே. (௯)

ஏட்டைசித்தவிர்தென்னெண்ணமெலா மெய்தவொளிதந்தியான்வனைந்த, பாட்டைப்புனைந்து பரிசளித்தபரமஞானப்பதிக்கொடியே தேட்டைத்தனிப்பே ரருட்செங்கோல் செலுத்துஞ்சுத்தசன்மார்க்கக், கோட்டைக்கொடியேயானந்தக்கொடியேயடியேற்கருளுகவே. (௰)

திருச்சிற்றம்பலம்.